உ

கடவுள் துணை.

விச்சித்திர

ஜெகஜாலக்கண்ணாடி.

ஒன்றாம்பாகம்.

இவை ௰-பாகம் வரையில் அச்சிடப்பட்டு ஒரே கட்டடமாகவும் பயிண்டு செய்திருக்கிறது.

இவை-செஞ்சி

ஏகாம்பரமுதலியாரா லியற்றப்பட்டு

திருப்பதி

இரத்தினமுதலியாரவர்களது

கலைக்கியானமுத்திராக்ஷரசாலையிற்

பதிப்பிக்கப்பட்டது.

1896.

உ

கடவுள்துணை.

விச்சித்திர ஜெகஜாலக்கண்ணாடி.

காப்பு-விருத்தம்

முந்தியே பராபர சத்தியாகி
மூவர்களை யுண்டுபண்ணி முதன்மையானாய்
பித்தியே பெருமாளின் தங்கையானாய்
பெருமையுடன் சிவனுடைய தேவியானாய்
சிந்தைமகிழ் முக்கோடி மும்மூர்த்தியோடே
செய்துவைத்தாய் சித்தர்பதி னெண்பேர்தன்னை
வுந்தனருளா லுதித்த கணபதியைவேண்டி
ஓதினேன் யிச்சாலம் வுலகமீது

ஒருவர்மேல் விஷமேற்றுஞ் ஜாலம்.

விஷமேற்றுஞ் ஜாலமதை வுலகமீதில்
விளம்புகிறே னனைவருக்கும் வெளியாய்த்தானே
வசியமல்லதல்மவி விரையுஞ்சேரு
வளமாக கம்பிளிபூச்சி மயிரும்கொள்ளு
வுச்சிதமாய்சட்டி அடி கரியும்சேர்த்து
வுறுதியுடன் யெள்ளெண்ணெய் விட்டரைத்து
பட்சமுடன் டப்பிதனில் வைத்துக்கொள்ளு
பக்குவமாய் தடவிவிட்டால் பதருவாரோ.

(வ-ம்) முருக்கமரத்தின் மீதுயிருக்குங் கம்பிளிபூச்சிமயிரும்தல்மவிவிரையும் வீட்டில்சமைக்கும்சட்டி அடிகரியும் நெல்லெண்[illegible]ம் இவைநான்குமரைத்து மைபோல் செய்துவைத்துக்கொண்டு ஜால[illegible] ஆடுமிடத்தில்குனிந்து கல்லையெடுத்து ஒருவர்கையில்கொடுத்துவிட்டு இந்தமையை விரலில்தொட்டுக்கொண்டு தெரியாமல் பூசிவிட்டால் கல்லில் யிருந்துதான் விஷம் யேறுதென்று சப்புவார்கள். 116

இராவில் யிருட்டுவீட்டில் சூரியனைக்காட்டுஞ் ஜாலம்.

இராவிலேசூரியனைக் காட்டினாக்கால்
எல்லவர்க்கும் ஆச்சரியந்தானேயப்பா

கருத்துடனே தில்லைப்பால் கொண்டுவந்து
கண்மணியே திமிரிபாஷாணம் சேர்த்து
பெருமையுடன் இவ்விரண்டு மரைத்துநீதான்
பிரியமுடன்வெய்யலிலே வுலரவைத்து
சூரிப்புடனே செவித்தின்மேல் யெழுதிவிட்டு
குவலயத்தில் காட்டமனம் மகிழுவாரோ

வ-ம் தில்லைப்பாலும் திமிரிபாஷாணமும் சேர்த்து அரைத்து உலரவைத்து காய்ந்தபிறகு சந்தனக்கல்லில் சலம்விட்டுவுரைத்துபுருசலெடுத்து சூரியனைப்போல் செவித்தில்எழுதிவிட்டு வைத்திருக்கவும் இரவில் எவருக்காகிலும் காண்பிக்க வேணுமென்றால் முன்னுதாய் கொஞ்சம் கற்பூரங்கொளுத்திவிட்டு அனைவர்களையும் அந்த அரைக்குள்அழைத்து சூரியனை வரவழைக்கிறேன் என்றதாய் சொல்லிக் கொண்டேயிருந்து கற்பூரம் அவியுந்தருணத்தில் மந்திரஞ்செய்பவர் போல் விபூதியைப்போட்டு கற்பூரம் அவிந்தவுடன் குப்பென்றதாக தெரியும் சூரியனை வசியஞ்செய்து வைத்தான்யென்று ஆச்சரியப்படுவார் அனைவரும்பார்த்தபிரகுகற்பூரம்கொளுத்திசூரியன்மறைந்துவிட்டார்போங்களென்றுசொல்லிஅனுப்பிவிட்டு கதவைமூடிவிடவும்.

தண்ணீரில் மணலைக்கலக்கி வுதரிமண் யெடுக்குஞ்ஜாலம்.

கேட்டவர்க்கு இச்சாலஞ் சூட்சமப்பா
கருத்தினால் செய்ததனைக் காணவேணும்
எட்டிலேபுளிகினன் யென்றுசொல்லி
எண்ணாதே விளாம்பிசினி கொண்டுவந்து
கூட்டப்பா ஜலம்விட்டு குழம்புபோலே
கொள்ளவே மணல்சேர்த்து பிசைந்துநன்றாய்
வட்டமா யுலரவைத்து ஜலத்தில்போட்டு
வாரியே காய்ந்தமணல் காட்டலாமே.

...ம் வெளாம்பிசினிகொண்டுவந்து தண்ணீரில் கரைத்துமணலில் பிசரிவுலரவைத்து உதிரியாய்வைத்துக்கொண்டு சலத்தில்போட்டுகலக்கிவிட்டு கைபோட்டுவாரினால் காய்ந்த மணல்எடுத்து காட்டலாம்.

பூமியில்புதைத்தமுட்டை மாயமாய்பரக்குஞ்ஜாலம்.

மனக்கவலையாய்விடுவார் திகைப்பாரப்பா
மனம்போனபடியுரைப்பார் சூட்சங்காணார்
எனக்குரைத்த குருமொழியை கேட்டுவாங்கி
எழுதினேன் அனைவருக்கும் வேணுமென்று

ஊமைசுவங்காரங் கொண்டுவந்து
  கருக்குடனே பொரித்துமுட்டை போலேசெய்து
ஊனதுடனே புதைத்துஜலந் தெளித்துமூடி
  எடுக்கார்கள் வசியமென்று திகைப்பாரப்பா

(வ-ம்) வங்காரங் கொண்டுவந்து பொரித்து முட்டையைப்போற் செய்துவைத்திருந்து சபையோர்களுக்குகாட்டி யிந்தமுட்டையைபூமியிற்புதைத்துவிடுகிறேன் ஆருகிலும் எடுக்கிறீர்களாவென்றுகேட்டு கொஞ்சம்பள்ளங்கொண்டு இந்தமுட்டையைவைத்துஜலந்தெளித்து சடக்கென்று மண்ணைத்தள்ளி மூடிவிட்டு சற்றுநேரம்பொ... ...ருகிலுந் தோண்டியெடுக்கச்சொன்னால் முட்டைஅகப்படா... ...மென்று நம்புவார்கள்.

பாலு சர்க்கரை ஆகும் ஜாலம்.

பசும்பாலைஅடுப்பில்வைத்து காயும்போது
  பக்குவமாய்பெருந்துத்தி வேரைநீதான்
பிசகொன்றுமில்லாமல் துடுப்புசெய்து
  பிரியமுடன்கிளரிகொண்டு வந்தையானால்
வசமாககுழம்புபோல் காச்சிநீதான்
  வாயப்பாபுட்டிதனில் வூத்திவைத்து
நிட்சயமாய் நாலுநாள் வைத்துப்பாரு
  நினைத்தபடி சீனிசர்க்கரைப் போலேகாணும்

(வ-ம்) பசும்பால் கொண்டுவந்து அடுப்பில்வைத்து காய... பெருந்துத்தி வேரை துடுப்பாய்செய்துகிளரிக்கொண்டேயி... ...ல்நன்றாய்காய்ந்தபிறகு ஆரவைத்து புட்டியில் வூத்தி நாலுந... ...த்துபார்த்தால் சீனி சர்க்கரைப்போலிருக்கும் இதை சா... ...ய்செய்துதின்றாலும் தாதுவிர்த்தியாகும்.

தீபமேற்றிவைத்தால்வீடெங்கும் சர்ப்பங்களாக... யிருக்குஞ்ஜாலம்.

வீடெங்கும் மனைப்பாம்புக் காட்டவேணும்
  வுனைமதித்துஅனைவர்களும் வணங்கவேணும்
வாட்டமாய் நல்லபாம்பின் கொழுப்பைவாங்கி
  வஸ்திரத்தில்தோய்த்ததனை நிழலுலர்த்தி
காட்டப்பாயித்துகிலை வத்திசெய்து
  கண்மணியேதிருவிளக்கில் ஏத்திநீதான்
ஓட்டமப்பா பரப்பார்கள் பார்த்தோரெல்லாம்
  ஒன்றுமில்லைசூட்சமப்பா செய்துபாரே.

(வ-ம்) நல்லபாம்பின் கொழுப்பைவாங்கி துல்லிதமானவஸ்திரத்தில்துவட்டி னிழலிலுலர்த்தி திரியாகச்செய்துதீபத்தில்போட்டுக்கொளுத்தி காட்டினால் வீடெங்கும் பாம்பாகதோணும் பார்த்தவர்களெல்லாம் மொண்டோடுவார்கள். 121

சலத்தை பன்னீராக்கும் சாலம்,

சலத்தைபன்னீர் ஆக்கியே காட்டவேணும்
சபைதனிலேகண்டவர்கள் மயங்கவேணும்
யெலக்கியமாய்கண்டுகொள்ள வெளியாய்தானே
யெசன்சு ஆப்-ரோஸ் கொண்டுவந்து
வுல்லாசமாய்ஜலத்தில் கொஞ்சம்போட
வுத்தமனேகமகமென்று பரிமளிக்கும்
வல்லமையாய்அனைவருக்கும் காட்டிநீதான்
வாரியேஅனைவருக்கும் தெளிக்கலாமே.

(வ-ம்) ஒருதாம்பாளத்தில் ஜலம்கொண்டுவரும்படிசெய்துயெசன்சு-ஆப்-ரோஸ்-கொண்டுவந்து ஒருவருக்கும்தெரியாமல்ஜலத்தில் நாலுதுளிவிட்டால் அத்தர்வாசனைகமகமவென்றதாகபரிமளிக்கும்அனைவருக்கும்காட்டலாம் அந்தவஸ்துவை சிரியசெப்புக்குழாசெய்து அதிலவிட்டுவைத்திருந்து அந்தகொழாவைகைவிரலில் பக்குவமாயடக்கிஜலத்தில்விடவேண்டியது மருந்துஷாப்பில்கிடைக்கும் யெசன்சு ஆப்ரோஸ்-யென்பது தமிழில் ரோசாவின்சத்துஅந்தந்தசத்துக்களை வாங்கி அந்தந்த மணம் காட்டலாம். 122

கழுத்தில் கத்திகுத்தும்ஜாலம்,

கூச்சமில்லா கத்தியினால்குத்தலாகும்
குறைஒன்றுமில்லையப்பா அறிந்துகொள்வீர்
பேச்சென்றுநினையாதே கத்திதன்னை
பிரியமுடன் யிரண்டுதுண்டஞ்செய்துகொண்டு
ஆச்சரிக்கவில்லொன்று வளவாய்செய்து
அன்புடனேகத்தியதில் பற்றவைத்து
பட்சமாய்மரவுசெய்து மாட்டிவிட்டால்
பதறுவார் சபையிலுள்ளோர் கதறுவாரே.

(வ-ம்) ஒருகத்தியைமையமாய்இரண்டுதுண்டுசெய்து பின்கழுத்தில்பதியும்படியாக வில்செய்து அந்தகத்தியில்பத்தவைத்து ஜாலம்ஆடும்யிடங்களில் முன்னுதாய் ஒருகத்தியை காண்பித்து குத்துவேனென்று ஒருவனைப்படுக்கவைத்து துணிமேலே போட்டுமூடி அந்த கத்தியைமறைத்து வில்கத்தியைமாட்டிவிடவும்ஆட்டுரத்தத்தைத்துணி

யில்நோய்க்குவரைவைத்திருந்து ஜாலம்ஆடும்பொடத்தில் அந்த துணி யைகொண்டுவந்து அறுத்து கழுத்தில்பிழிந்தால் ரத்தமாகவேயிருக் கும் ஆச்சரியப்படுவார்கள். 123

சிக்கத்தில்கட்டி பெட்டியில்போடுஞ்ஜாலம்.

சிக்கத்தில்கட்டுகிற சூட்சமப்பா
  ஜகத்தில்சொன்னுகிறேன் வெளியாய்தானே
பக்குவமாய்சிக்கமது செய்துகொள்ளு
  பாலகனே அடிதனிலே சுருக்குவைத்து
மேக்கமதுயிலையப்பா மனுஷன்தன்னை
  யெடுத்ததனில்கட்டிமுடி யெண்ணிபோடு
பார்க்கவேபெட்டிதனில் போட்டுமூடு
  பண்பானஅடிசுருக்கை அவுக்கலாமே.

(வ-ம்) வலையைப்போல்சிக்கம்ஒன்றுசெய்து அடியில்சுருக்குவை த்துகயர்கோர்த்துசுருக்கிமுடிபோட்டுவைத்திருக்கும்அனைவருக்கும் காட்டியிந்தசிக்கத்தில்கட்டிபோடுகிறேன்யென்றுசொல்லி அந்தசிக்க த்தைவிரித்துப்போட்டு ஒருமனிதனைகைபெரிவிரல் ரெண்டும் கருத் துடன்சேர்த்துக்கட்டி சிக்கமத்தியில்குந்தவைத்து நன்றாய்தலைமு தல்தேகமெல்லாம் வளைத்துகட்டிகெட்டிமுடிகளாகப்போட்டு மூங் கல்பெட்டி ௩-அடிநீளமும்வட்டமாய்பெட்டிசெய்து வாய்-௧வ அடிஅகலமுள்ள பெட்டியில்போட்டு மேல்மூடியை ஒருவனைபிடிக் கச்சொல்லி துப்பட்டிமேலேமூடவுசெய்துவிடவும் பெட்டியில் யிரு ப்பவனுக்கு சொல்லிவைக்கவேண்டியது யென்னவென்றால் விரலை ம டக்கியிழுத்துக்கொண்டுசிக்கத்தின் அடிசுருக்கையிழுத்தால் சிக்க ம்அவிழ்க்காய்கையிட்டுக்கொள்ளலாம்மறுபடியும்சுருக்கை கோர்த்துகட் டிவெளியில் போட்டுவிடவும் கட்டினபிரகாரம் சிக்கம்யிருக்க ஆளைக் காணேனென்று ஆச்சரியப்படுவார்கள் பெட்டியில்ஒருபக்கம் பதுங் கியிருக்கவேண்டியது கத்திகுத்தும்போது சைகையோடுபிரளவும்.

குடத்தில் தண்ணீர்ரொப்பி பட்டாவைகுத்தி தூக்கும்ஜாலம்.

குடமதையத்தண்ணீரை ரொப்பிவிட்டு
  கூரியதோர்ஜானகியை மேலேமூடு
கடினமல்லகத்திமுனை துவாரம்செய்து
  கண்மணியேஜானகியில் சமுனக்கேளு
வடிவாகமையத்தில் துவாரம்செய்து
  வையப்பகத்திமதில் குத்தினீதான்

பிடிப்பாக கத்திதனில் கம்பிகோர்த்து
  பிரியமுடன் கட்டிபோட்டு தூக்கலாமே

(வ-ம்) கொடத்தில்சலம்ரொம்பி ஜானகியை கத்திபூராதுவாரஞ்செய் துமேலே மூடிபட்டா கத்தியின்முனையில்லேயிதுவாரஞ்செய்து ஜானகி துவாரத்திற்கு சரியாய் எதிர்சம்பழுக்கவைத்து கத்தியைபதில் நுழைத்து கத்தியில்கம்பிகோர்த்து கொடத்தில் உள் வுதட்டில்தாக்கும்படியாய் ஒருகொம்பைகட்டி விட்டு மேலேதூக்கிகட்டிவிடலாம் கத்தியடியில் துவாரமானது வினையாவது வைத்துயிருக்கவும், 125

தலைமீது அடுப்புவைத்துயெண்ணைகாச்சுஞ்சாலம்

தலைமீதுஅடுப்புவைத்து நெருப்புகொட்டி
  தம்பியடே யெண்ணையதை காச்சவேணும்
அலைகடல்சூழுள்ளவர்கள் நடுங்கியோட
  அடுப்புசெய்யுமசூட்சமதை பரிந்துகொள்ளு
நிலைமையுடன் ஆனைத்தத்தி வெத்திலையும்சேர்த்து
  நிர்மைதயில்லை கரியமண்ணும் சுண்ணாம்புங்கூட்டு
கலக்கயில்லையடுப்புசெய்பாக்குவரால்போலே
  கண்மணியேசெய்துவித்தைகாட்டலாமே

(வ-ம்) வெத்திலை ஆனைதத்தி சிமைசுண்ணாம்பு இந்தநாலும்சேர்த்துபாக்குவரல்போல்செய்து மேல்பக்கம் மூன்றுவாய்வைக்கவும்தலைமீதுவைத்துகாத்துபோகாமல் துணியடியினால் தலைமுதல்திரேகமெல்லாம்மூடிவிட்டு ஒருசொம்பிவனையஞ்செய்து துணிசுத்திகொளுத்திவஸ்ஸாபோட்டு வத்திரத்திதாரம்கொளுத்திவைத்துதகாத்தினால் தட்டுசெய்து எண்ணைஆத்திவதிகாய்ந்தபிறகு கொஞ்சம்சலம்தெளித்தால்குப்பென்றதாககரியும் கண்டவாகள் ஆச்சரியப்படுவார்கள் அடுப்புஉயரம்-௩-அடிவைக்கவும்வளயம்செய்து அடுப்பிலபோட்டால்ரெண்டுஅங்கலம்உள்ள இரங்கவேண்டியது கொளுத்தும்போதுகத்தாழை செ... இல்லையாகஅருத்து அடுப்பின்அடியில்வைத்தாலும்வைக்கலாம்

பூனையைவிடுவெல்ஞ்ஜாலம்

பூனையின்மேல்வெளிதிர்த்துவருமேயாகில்
  புவியோர்க்குஆச்சரியம் தானேயப்பா
நினைவாகஎருக்கன்பால் கொண்டுவந்து
  நிலமையுடன்குப்பமேனி சாறும்சேர்த்து
யெகமாகவெளிபீது பூசிவிட்டு
  பின்பமுடன்சன் ... து விட்டேபாரு

மனங்கலங்கிபூனையது மிரண்டேஓடும்
மண்டலத்தில்கண்டுமன மகிழுவாரே.

(வ-ம்) ஒருஎலியைப்பிடித்து திரோகமாதியர்தமும் எருக்கன்பாலு
ம்துப்பமேனிசாறும்பூசிவிட்டு பூனையெதிரில்விட்டால் அந்தப்பூனை
ந்துமுகர்ந்துபார்த்தவுடன் அதைகடிக்காமல்தலைவெறிகொண்டதுபோ
ல்சுத்தி காண்டேயிருக்கும் கண்டவர்கள்யென்னமோவசியஞ்செய்து
வைத்தான்யென்று ஆச்சரியப்படுவார்கள். 127

பேன்மறணவித்தை

நாமெனவேகெந்தகமும் விருகன்ஒண்ணு
நலமானபாதரசம் விருகன்ஒண்ணு
சேரமெனவேஇவ்விரண்டும் சேர்த்தரைத்து
சுத்தமுடன்நூலில்பூசிவுலரவைத்து
ஓமெனவேகுடுமைதனை இந்தநூலால்
உறுதியுடன்கட்டிநீ வைத்தையானால்
போமெனவேபேன்களெல்லா மடியுமப்பா
பொய்யல்லசத்தியமாய்செய்துபாரே.

(வ-ம்) கெந்தகமும் ரசமும் விருகன்ஒண்ணாக இவ்விரண்டையும்
சேர்த்துஅரைத்துநூலில்பூசிஉலரவைத்துகாய்ந்தபிறகுஸ்திரீகளாவ
துபுருசர்களாவது பேன்மிகுவாக பிடித்திருந்தால் இந்தகயற்றைகட்
டினால் அந்துடன் பேன்களெல்லாம் மரணமாகிவிடும். 128

பாம்புவுண்டாகுஞ்ஜாலம்.

மெரண்டுமேமேவோடுவார்கள் மேதினிதனிலுள்ளோர்கள்
அரிந்திடும்பே-ரோஸ்தர் பயிண்டுமேவாங்கிவந்து
கருத்துடன்தரையில்வைத்து காட்டப்பாதிரியைகொஞ்ச
கருத்துடன்படம்விரித்து சர்ப்பமுமாடும்பாரே

(வ-ம்) பே-ரோஸ்-சர்பயிண்டுகொண்டுவந்துகொஞ்சம்பூமியின்மீ
துவைத்துகொளுத்தினால் சர்ப்பம்போல்படமெடுத்து ஆடும் சர்ப்ப
மென்றேநம்புவார்கள் இதுஅநேகர்செய்துஇருப்பார். 129

ஒன்பதாம்பாகம் - முற்றிற்று.

இனி-பத்தாம்பாகம்.